**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 - 2020**

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 3267–(எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06 (அ) உறுப்புரை மற்றும் 3268–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03 (அ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்டிக்கைகளின் பிரகாரம், மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 28,713 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 22,668 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 6,045 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 யூன் 24 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2022 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. பௌதீக செயலாற்றல்**

**2.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 03 பிரதான கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| **கூறுகள்** | **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | | **கணக்காய்வு விடயங்கள்** | **விளைவுகள்** | **தாமதங்களிற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | **எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம்** | **அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம்** | | | |
| மேல் எலஹெர கால்வாய் நிர்மாணம் | 87 | 55 | ஒப்பந்தம் வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் ஒப்பந்ததாரர்களால் வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுதல் | செயற்திட்ட நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட தாமதம். அதற்கு மேலதிக நிதி தேவையாக உள்ளமை. மேலும், அது விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்காகவும் தாக்கம் அளிக்கக் கூடியதாக இருந்தது. | ஒப்பந்தத்தின் கீழான நடவடிக்கைகள் தாமதங்களுடன் தொடங்கப்பட்டிருந்தன. |
| வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணம் | 81 | 47 | ஒப்பந்தமொன்றை வழங்குவதிலுள்ள தாமதங்கள் மற்றும் வழங்கப்பட்ட வேறு 02 ஒப்பந்தங்களின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட வேலைகளின் மெதுவான முற்னேற்றம் | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பங்குடமையாளர்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | வேலை வடிவமைப்பு குறைபாடுகள் மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மினிப்பே இடது கரை புனரமைப்பு | 100 | 71 | ஒப்பந்ததாரர்களால் ஒப்பந்த நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதில் மெதுவான முற்னேற்றம் | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பங்குடமையாளர்களிற்கு கிடைத்திருக்கவில்லை. | சிவில் நிர்மாண வேலை வடிவமைத்தல் குறைபாடுகள் |

**முகாமைத்துவத்தின் பதில்கள்**

மேல் எலஹர கால்வாய், வடமேல் மாகாண கால்வாய் மற்றும் மினிப்பே இடது கரை கால்வாய் நிர்மாணத்தின் தற்போதைய செயல்முன்னேற்றம் 2021 மே 01 ஆம் திகதியில் உள்ளவாறு முறையே 59, 55 மற்றும் 79 சதவீதத்தை கொண்டிருந்தது.

**கணக்காய்வாளரின் பரிந்துரைகள்**

செயற்திட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட கால எல்லையில் கிரய நலனாக பணிகளை நிறைவேற்றக்கூடிய வகையில் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்த பொதியின் கீழ் உள்ள சிவில் நிர்மாண வேலைகளை ஒழுங்குபடுத்துதல் அவசியமாகும்.

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) வேமெடில்ல இடது கரை கால்வாய் அபிவிருத்தி செய்தல் மற்றும் வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணத்தின் கீழ் மதகு நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த கால எல்லை 2018 திசெம்பர் 27 ஆம் திகதியில் முடிவடைய வேண்டும். 2021 சனவரி 06 ஆம் திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் எதிர்பார்த்த செயல் முன்னேற்றமான 100 சதவீதத்தில் 92 சதவீதம் அடையப்பட்டிருந்தது. திட்டம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிப்பதிலுள்ள | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் 95 சதவீதமான பௌதீக செயல் முன்னேற்றத்துடன் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. காணப்பட்ட நீர் பிரச்சனையின் காரணமாக ஒப்பந்தகாரருக்கு பௌதிக வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 2021 ஆகஸ்ட் 30 வரை சலுகைக் காலம் வழங்கப்பட்டிருந்தது. மகாவலி ஆலோசனை பணியகத்தினால் திட்டமிடல் மற்றும் மதிப்பீடு வழங்கப்பட்ட போதிலும் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒப்பந்த பொதியின் (MWWSIP) முற்பணமாக இது பெறப்பட்டிருந்தது. 2016 இன் போது ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதுடன் நீர்ப்பாசன திணைக்களம் | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நலிவின் காரணமாக ரூபா 154.6 மில்லியன் தொகையான ஒப்பந்த முரண் அவதானிக்கப்பட்டது. | | மற்றும் விவசாய அமைப்புகளின் கோரிக்கையிடப்பட்ட பல்வேறு தேவைகளுடன் நிர்மாணங்கள் மேற்கொள்ள வேண்டி இருந்தமையால் திட்டம் மாற்றங்களுடன் முரண்பாடாகி இருந்தது. | |
| (ஆ) | வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணத்தின் கீழ் நாபதகஹவத்த இலிருந்து மஹகிதுல நீர்த் தேக்கத்தை உள்ளடக்கிய சுரங்கம் வரையான பிரதான கால்வாய் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 93 சதவீத பௌதீக செயல் முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 41 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. மதியுரையாளர் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட அளவினை விஞ்சி சென்றமைக்கான காரணம் ஒப்பந்த பெறுமதி ரூபா 7,226.6 மில்லியன் ரூபா 1,413 மில்லியனால் அதிகரித்து சென்றமையாகும். | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | ஆரம்ப கட்டத்தின் போது ஒப்பந்ததாரர் திட்டமிடப்பட்ட முறையில் முறையாக தயாராகி இருக்கவில்லை. ஊழியம் மற்றும் இயந்திர உபகரணங்கள் காணப்பட்ட அபிவிருத்தி செய்தல் மற்றும் வேலை தளத்திற்கு பிரதான நபர்களை அனுப்புவதற்கும் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தபட்டன. காணியினை கைப்பற்றும் செயற்பாடுகளின் தாமதத்தினால் ஏற்பட்டிருந்ததுடன் விஷேடமாக 10 காணி கூறுகள் 2018 ஆம் ஆண்டு முதல் காணி கைப்பற்றல் முறைப்பாட்டு சபையில் காணப்பட்டது. உரித்து வழியிலும் மற்றும் வன சீவராசிகள் பிரதேசங்களின் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கு சில திட்டங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டமையின் விளைவாக மதிப்பீடு செய்யப்பட்ட அளவு அதிகரித்திருந்தது. | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | கிலோமீட்டர் 0+100 முதல் 3+860 வரை உயர் எலஹெர கால்வாய் நிர்மாணம் 2020 சனவரி 08 ஆம் திகதி பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. எதிர்பார்த்த பௌதிக செயல் முன்னேற்றம் 95 சதவீதம் ஆகும். எனினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான முன்னேற்றம் 63 சதவீதம் மாத்திரமாக இருந்தது. மதியுரையாளரின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட அளவுகளை விஞ்சி சென்றமையினால் ஒப்பந்த பெறுமதி ரூபா 3,742 மில்லியனில் இருந்து ரூபா 658.50 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | ஒப்பந்தக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | இந்த ஒப்பந்தம் 2016 நவம்பர் 11 ஆம் திகதி CML -MTD மதியுரை கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது டன் செயற்திட்டத்தின் ஆரம்ப பூர்த்தி செய்தல் 2020 சனவரி 08 ஆம் திகதி ஆகும். ஆரம்ப ஒப்பந்த தொகை இலங்கை ரூபா 3,742 மில்லியன் ஆகும். நிர்மாண நடவடிக்கைகளை செய்து கொண்டிருக்கும் போது பின்வரும் காரணங்களினால் அதிகரித்திருந்தது. விடயங்களின் அளவுகளில் கல் உடைத்தல், வெளிப்படுத்தப்படாத உள்ளபடியான வேலை தளங்களின் நிலைமை என்பன கிரய மதிப்பீட்டிற்கு முன் வரையறுத்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டமை ஆகும். | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மினிப்பே இடது கரை கால்வாய் மறுசீரமைப்பின் கீழ் மினிப்பே இடது கரை கால்வாய் - கட்டம் 1 மறுசீரமைக்கும் நிர்மாண கால எல்லை 2018 ஒக்டோபர் 13 ஆம் திகதி பூர்த்தி செய்ய பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் ஒப்பந்த கால எல்லையில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தவறி இருந்தமையினால் செயற்திட்ட கால எல்லை 2020 திசெம்பர் 20 ஆம் | நிகழ்ச்சித்திட்டக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | 2021 ஆகஸ்ட் அடுத்த நீர்த்தடை கால எல்லையில் இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் விடய பரப்பின் மாற்றங்களினால் ஒப்பந்த பெறுமதி ரூபா 408.6 மில்லியன் முதல் ரூபா 568.6 மில்லியன் வரை 40 சதவீதத்தினால் உயர்வடைந்து இருந்தது. 2020 திசெம்பர் 20 ஆம் திகதி காலநீடிப்பு முடிவடைந்து இருந்த போதிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்த்த பௌதிக செயல் முன்னேற்றம் 100 சதவீதத்தில் தற்போது வரையில் 97 சதவீத செயல் முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. | | | |
| (உ) | மினிப்பே இடது கரை கால்வாய் மறுசீரமைப்பின் கீழ் மினிப்பே இடது கரை கால்வாய் - கட்டம் 3 மறுசீரமைப்பு நிர்மாண கால எல்லையான 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. ஒப்பந்த கால எல்லையில் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறி இருந்தமையினால் ஒப்பந்த கால எல்லை 2020 ஒக்டோபர் 20 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் நீடிக்கப்பட்ட கால எல்லையில் வேலைகள் பூர்த்தி | நிகழ்ச்சித்திட்டக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | 2021 மே 31 இல் உள்ளவாறு பௌதிக செயல் முன்னேற்றம் 86 சதவீதம் ஆகும். 2021 ஆகஸ்ட் முதல் ஒக்டோபர் வரை அடுத்து வரும் நீர்த்தடை கால எல்லையின் பின்னர் மிகுதி வேலைகள் பூர்த்தி செய்யப்படும். | நிர்மாண வேலைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ள பௌதீக செயல் முன்னேற்றம் 75 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | | | |
| (ஊ) | மினிப்பே இடது கரை கால்வாய் மறுசீரமைப்பின் கீழ் அளவிடை வசதிகள் மற்றும் நீர் கட்டுப்பாட்டை உள்ளடக்கிய மினிப்பே மதகு அமைக்கும் ஒப்பந்த கால எல்லை 2020 நவம்பர் 12 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஒப்பந்த கால எல்லையில் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறி இருந்தமையினால் ஒப்பந்த கால எல்லை 2021 சனவரி 07 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் இக்கால எல்லையிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது. | நிகழ்ச்சித்திட்டக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | 2021 மே 31 இல் உள்ளவாறு பௌதீக செய் முன்னேற்றம் 61 சதவீதம் ஆகும். 2021 திசெம்பர் 31 ஆம் திகதி இந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண வேலைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 2015 – 2017 வரை அமல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட முறைமை செயற்திறன் மற்றும் நீர்உற்பத்தி இயலளவை அபிவிருத்தி செய்யும் மதியுரை சேவை | நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி விளைவுகள் மற்றும் நீர்வள முகாமைத்துவ தொழிற்பாடுகள் என்பவற்றிற்கு பாதகமாக தாக்கமளித்திருந் | முறைமை செயற்றிறன் மற்றும் நீர்உற்பத்தி இயலளவை அபிவிருத்தி செய்யும் மதியுரை (ISEWP) 2015 – 2017 வரை அமல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் 2018 | உரிய கால எல்லையில் தாமதமின்றி மதியுரை சேவைகளை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ISEWP) 2020 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தது. | ஒக்டோபர் 18 ஆம் திகதி மதியுரை ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2020 இன் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |
| (ஏ) | நிகழ்ச்சித் திட்டம் ஆகக்குறைந்தது மூன்று வருட பிரதான பெறுகை திட்டம் மற்றும் விரிவான பெறுகை திட்டம் என்பன அடுத்துவரும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட வேண்டும். எனினும் நிகழ்ச்சித் திட்டத்தினால் பிரதான பெறுகை திட்டம் மற்றும் விரிவான பெறுகை திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சி திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாது இருந்தமை. | 18 மாத பெறுகை திட்ட வசதிகள் முகாமைத்துவ கை நூலில் உள்ளடங்கி உள்ளது. அது தற்போது வரையில் நாளதுவரையாக்க பட்டிருந்ததுடன் அடுத்து வரும் ஆண்டுகளுக்கான விரிவான பெறுகை திட்டம் தயாரிக்கப்படும். | அடுத்து வரும் ஆண்டுகளுக்காக விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | பிரதான வதிவிட பொறியியலாளருக்கும், வதிவிட பொறியியலாளருக்கும் பொல்பிதிகம செயற்திட்ட அலுவலகத்தில் அலுவலக வசதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மூன்று தனியார் கட்டிடங்கள் ரூபா 2,160,000 கிரயத்தில் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. | நிகழ்ச்சித்திட்டக் கிரயத்தின் மிகையான ஓட்டம் | செயற்திட்ட வேலைத்தளம் பொல்பிதிகம அலுவலகத்துக்கு தூரத்தில் அமைந்துள்ளது. செயற்பாட்டு செலவினங்களை குறைப்பதற்கும், போக்குவரத்து காலத்தை சேமிப்பதற்காகவும் கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. காணப்பட்ட வேலைத்தளம் பூர்த்தியடைந்ததும் அவர்கள் பொல்பிதிகம அலுவலகத்திற்கு மாற்றப்படுவர். | நிகழ்ச்சித் திட்டம் சிக்கனமற்ற செலவினங்களை குறைக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு காணிகளுக்காக இழப்பீடு செலுத்துவதற்காக செலுத்தப்பட்ட பணம் தொடர்பாக வடமேல் மாகாண கால்வாய் செயற்திட்டம் அல்லது நிகழ்ச்சி திட்ட முகாமைத்துவ அலகினால் முறையான கணக்கீட்டு தகவல் முறைமையொன்று பேணி செல்லப்பட்டு இருக்கவில்லை. 2018 திசெம்பர் வரையில் செயற்திட்ட கணக்குகளுக்கும் களேவள பிரதேச செயலக கணக்குகளுக்கும் இடையே ரூபா 21.4 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. 2021 சனவரி 20 வரையில் அந்த வேறுபாட்டுக்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் செலவினங்கள் அதிகரித்து குறிப்பிடப்பட்டுள்ளது. | வேறுபாடுகளின் இணக்கம் 02 வாரங்களில் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | வேறுபாட்டுக்கான காரணங்களை வெகு விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஔ) | 2020 திசெம்பர் 31 வரையில் மேல் எலஹெர கால்வாய் செயற்திட்டத்திற்கு உரிய 741 காணி கூறுகளை கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் எந்த ஒரு காணி கூறும் 2020 திசெம்பர் 31 இல் கைப்பற்றப்பட்டு இருக்கவில்லை. மேலும் வடமேல் மாகாண கால்வாய் செயற்றிட்டத்திற்கான 961 காணி கூறுகளை கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட | செயற்திட்ட செயற்பாடுகள் தாமதம் அடைந்தமை. | ஆரம்பமாக 941 காணி கூறுகள் இனங்காணப்பட்ட போதிலும் தற்போது வரையில் அது 741 கூறுகள் வரை குறைவடைந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக காணி கைப்பற்றுதல் சட்டத்தின் (2 ஆம் பிரிவு) ஆரம்ப காணி அளவுகள் காணி கைப்பற்றுவதன் மூலம் அரசாங்கத்திற்கு உரிய காணி கூறுகள் இனங்காணப்பட்டதன் பின்னர் ஆகும். தற்போது வரையில் இழப்பீடு செலுத்தும் செயற்பாடுகள் இறுதிக்கட்டத்தை | காணிகளை கைப்பற்றும் செயற்பாடுகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 947 காணி கூறுகள் கைப்பற்றப்படிருந்தது. எனினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்த ஒரு காணி கூறும் காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | அடைந்து இருந்தபோதும் பல்வேறு நிறுவனங்கள் காணப்படுகின்ற காணிகளை கைப்பற்றும் செயற்பாடுகளில் அதிக இழப்பீடு செலுத்தும் செயற்பாடுகளினால் தாமதம் அடைந்திருந்தமை தாக்கம் அளித்திருந்தது. | |

## 2.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டுநிதி நிதியக் கணக்கில் கால ரீதியில் மீளழிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3267 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கு மீதி அ. டொலர் 458 மற்றும் 3268 ஆம் இலக்க கணக்கில் மீதி அ. டொலர் 821 அளவாக இருந்தது. அதனால் குறித்த திகதியில் உள்ளவாறு ஒப்பந்தங்களை செலுத்த நிகழ்ச்சி திட்டம் தவறியிருந்தது. 2020 நவம்பர் 30 வரை தாமத கொடுப்பவர்களுக்கு 8,696,899 தொகையான நிதி கட்டணம் ஒப்பந்த காரரினால் காட்டப்பட்டிருந்தது. | தாமத கொடுப்பனவுகளுக்கு நிதி கட்டணம் அறவிடக் கூடியதாக இருந்தமை. | ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை மதியுரையாளரினால் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மதியுரையாளரின் பரிந்துரையின் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு காரணமாக நிதி குறியீட்டு இலக்கம் 17 இன் கீழ் பொதுத் திறைசேறியினால் நேர காலத்தில் கட்டு நிதி விடுவித்தல் மேற்கொள்ளப்படாமை ஆகும். | நிகழ்ச்சித் திட்ட கட்டுநிதி நிதியக் கணக்கு கால ரீதியில் மீளிளிப்பு செய்ய வேண்டியதுடன் தாமதின்றி குறித்துரைத்த திகதியில் ஒப்பந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 387 ஆம் இலக்க மீளப்பெறும் விண்ணப்பத்தின் மூலம் பெறுமதி யூரோ 81,100.29 தொகையான விலை பட்டியல்களுக்கு அ. டொலர் 81,100.29 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் விலை பட்டியல்களை கணிப்பிடுவதற்கான சான்றுகள் கணக்காய்விற்காக காணப்படவில்லை. | பற்றாக்குறை அல்லது மிகை கொடுப்பனவுகள் ஏற்பட கூடியதாக இருந்தமை. | கணக்காய்விற்காக 387 ஆம் இலக்க மீளப்பெறும் விண்ணப்பத்திற்குரிய சகல கணிப்பீடுகளும் காணப்படுகின்றது. | சரியான விலை பட்டியல் மற்றும் உரிய பண அலகுகளின் பிரகாரம் சகல கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |